**மத்திய நுவரகம்பலாத பிரதேச சபையி - 2022**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

மத்திய நுவரகம் பலாத பிரதேச சபையின் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான சொத்துக்கள் பொறுப்புக்கள் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த விரிவான வருமானக் கூற்று / தேறிய சொத்துக்கள் / உரிமை மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று, முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகள் மற்றும் ஏனைய விளக்கமளித்தல் தகவல்களின் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2022 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபை சட்டத்தின் 172 (1) உப பிரிவு மற்றும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையில் உள்ளடக்கப்பட்ட ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காண்பிக்கப்பட்டுள்ளன.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்டுள்ள விடயங்களிலிருந்தான தாக்கங்களைத் தவிர்த்து, நிதிக்கூற்றுக்கள் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறு மத்திய நுவரகம் பலாத பிரதேச சபையின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதன் நிதிச் செயலாற்றல் மற்றும் காசுப் பாய்ச்சல் உள்ளூராட்சி மன்றங்களுக்கான இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியத்திற்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கின்றது என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமத்திற்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக் கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக முகாமைத்துவத்தின் மற்றும் தொடர்பான ஆளுகைத் தரப்பினரின் பொறுப்புக்கள்

இந்நிதிக்கூற்றுக்களை உள்ளூராட்சி மன்றங்களுக்கான இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமத்திற்கு அமைவாக தயாரித்தல் மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் இன்றிய நிதிக்கூற்றுக்களை தயாரிக்க கூடிய வகையில் உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பாகும்.

பிரதேச சபையின் நிதி அறிக்கையிடல் நடைமுறை தொடர்ான பொறுப்பு ஆளுகைத் தரப்பினர்களால் ஏற்றுக் கொள்ளப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 16(1) உப பிரிவின் பிரகாரம் பிரதேச சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு முடியுமான வகையில் சொந்த வருமானங்கள், செலவுகள், சொத்துக்கள், பொறுப்புக்கள் என்பன தொடர்பாக முறையான ஏடுகள் மற்றும் அறிக்கைகள் பேணப்படுதல் வேண்டும்.

## 1.4 கணக்காய்வு விடயப் பரப்பு (நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்)

ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்கள் மோசடி மற்றும் தவறுகளின் காரணமாக ஏற்படுகின்ற பொருண்மையான பிறழ் கூற்றுக்களற்றவை என்பதற்கு நியாயமான உறுதிப்பாட்டை வழங்குவதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வு அறிக்கையை வழங்குவதும் எனது குறிக்கோளாகும். நியாயமான உறுதிப்பாடானது உயர் மட்டத்திலான ஒரு உறுதிப்பாடாகக் காணப்படுகின்ற போதிலும், இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எவ்வேளையிலும் பொருண்மையான பிறழ் கூற்றுக்களை வெளிப்படுத்தும் என்பதற்கான ஒரு உத்தரவாதமாக இருக்கமாட்டாது. மோசடிகள் மற்றும் தவறுகள் தனியாகவோ அல்லது கூட்டாகவோ தாக்கத்தை ஏற்படுத்துவதன் காரணமாக பொருண்மையான பிறழ்கூற்றுக்கள் ஏற்படக்கூடியதுடன் இந் நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துபவர்களால் எடுக்கப்படுகின்ற பொருளாதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கவனித்தல் வேண்டும்.

என்னால் தொழில்சார் வெளிப்படைத்தன்மை மற்றும் தொழில்சார் ஐயப்பாடுகளுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டது. என்னால் மேலும்,

- வெளிப்படுத்தப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்கும் போது மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களினால் ஏற்படும் ஆபத்துக்களை இனங்காண்பற்கும் மதிப்பீடு செய்வதற்குமாக சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகள் திட்டமிடப்பட்டு அமுல்படுத்தப்பட்டன. பிழையாகக் காட்டுவதன் காரணமாக ஏற்படுகின்ற பொருண்மையான பிறழ்கூற்றுக்களிலிருந்து இடம்பெறுகின்ற தாக்கங்களை விட மோசடிகளால் இடம்பெறுகின்ற தாக்கங்கள் பாரியதாக இருப்பதானது தவறான கூட்டிணைவால், போலி ஆவணங்களைத் தயாரிப்பதனால், வேண்டுமென்றே விட்டுவிடுவதனால், பிழையாகக் காட்டுவதனால் அல்லது உள்ளகக் கட்டுப்பாடுகளைத் தவிர்ப்பதனால் மோசடிகள் ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கமல்லாதிருந்தும் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளைத் திட்டமிடும் வகையில் உள்ளகக் கட்டுப்பாடுகள் மீதான தௌவொன்று பெற்றுக் கொள்ளப்பட்டது.

- பயன்படுத்திய கணக்கீட்டு கொள்கைகளின் பொருத்தத்தன்மை, கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத்தன்மை மற்றும் முகாமைத்துவத்தினால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புகளின் வெளிப்படுத்தல்கள் மதிப்பீடு செய்யப்பட்டன.

- நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களுக்கு அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் நிகழ்வுகள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளது எனவும் வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல் மதிப்பீடு செய்யப்பட்டது.

இயலுமான வரையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்காக விடயப்பரப்பு விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்கள் சமர்ப்பித்தல் தொடர்பாக பார்க்கும் போது பிரதேச சபையின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாக பேணிச் செல்லப்படுகின்றதா எனவும்
- ஏதேனும் உரிய எழுத்துமூல சட்டத்திற்கோ அல்லது பிரதேச சபையினால் வழங்கப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்க பிரதேச சபை செயற்படுகின்றதா எனவும்

- தனது அதிகாரங்கள், இலக்குகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும்

- வளங்கள் சிக்கனமாகவும், செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கால எல்லைக்குள் மற்றும் உரிய சட்ட விதிகளுக்கு இணங்க பெறுகை செய்யப்பட்டுள்ளதாகவும்

## 1.5 ஏனைய சட்டத் தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் கீழே குறிப்பிடப்பட்ட தேவைப்பாடுகள் தொடர்பாக விசேட ஏற்பாடுகள் உள்ளடக்குகின்றன.

(அ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 6(1)(ஈ)(iii) ஆம் பிரிவின் தேவைப்பாடுகளின் பிரகாரம் பிரதேச சபையின் நிதிக்கூற்றுக்கள் கடந்த வருடத்தை ஒத்திருந்தது.

(ஆ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 6(1)(ஈ)(iv) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடுகளின் பிரகாரம் முன்னைய ஆண்டின் போது என்னால் மேற்கொள்ளப்பட்ட பரிந்துரைகள் சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

## 1.6 நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பது தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 1.6.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | கடந்த ஆண்டு பிழைகளை சரிசெய்வதற்கான நாளேட்டு குறிப்பு 05 இன் படி கணக்கிடப்பட்ட மங்கடாவில கொக்கிச்சியா சாலையை அமைக்கும் திட்டச்செலவான ரூபா.283,490 ஐ நீக்கும் போது, 2021 ஆம் ஆண்டுக்கான தேய்மானம் ரூபா.28,349 ஆக இருந்ததுடன் அது. ரூபா.255,141 ஆக அதிகமாக திரட்டப்பட்ட நிதியத்திற்கு செலவு வைக்கப்பட்டிருந்தது. | ஏற்றுக் கொள்கிறேன். | சரியான பெறுமதிகள் கணக்கீடு செய்யப்பட வேண்டும். |
| (ஆ) | பிரதேச அபிவிருத்தி சபையின் (LDSP செயற்திட்டம்) திட்டத்தின் கீழ் நிர்மாணிக்கப்பட்ட பந்துலகாம முன்பள்ளியின் கட்டிடத்திற்காக மீளாய்வாண்டில் செலுத்தப்பட்ட ரூபா.7,844,234 ஆனது முற்பணங்களின் கீழ் கணக்கிடப்பட்டிருந்தது. | -மேற்படி- | -மேற்படி- |

| | | | |
|---|---|---|---|
| (இ) | விரிவான வருமான கூற்றின்படி, ஊழியர் சம்பள கொடுப்பனவுகளை திருப்பிச் செலுத்தியமை ரூபா.25,525,586 எனக் குறிப்பிடப்பட்டுள்ள போதிலும், (குறிப்பு எண் 04) அதில் இருந்த ரூபா.5,160,000 ஆன உறுப்பினர் கொடுப்பனவுகளின் திருப்பிச் செலுத்தல்கள் தனித்தனியாக வெளிக்காட்டப்படவில்லை. | -மேற்படி- | ஊழியர் கொடுப்பனவுகளின் திருப்பிச் செலுத்தல்கள் விரிவான வருமான கூற்றில் தனியாக வெளிக்காட்டப்பட வேண்டும். |
| (ஈ) | மீளாய்வாண்டில் கிராவல் சாலைகள் நிர்மாணங்களில் உள்ளடங்கிய ரூபா.390,208 மதிப்புள்ள 02 கல்வெட்டுகள் நிர்மாண மீண்டெழும் செலவின மானியங்களின் கீழ் கணக்கிடப்பட்டிருந்தது. | -மேற்படி- | நிலையான சொத்துக்கள் சரியாக அங்கீகரிக்கப்பட வேண்டும். |
| (உ) | மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் ரூபா.223,060 மதிப்பிலான இருப்பொன்று சொத்துக்கள் மற்றும் பொறுப்புகள் கூற்றில் காட்டப்படவில்லை. | -மேற்படி- | மிகுதி இருப்பு சரியாக கணக்கிடப்பட வேண்டும். |
| (ஊ) | மீளாய்வாண்டின் மிகை/பற்றாக்குறையாக அங்கீகரிக்கப்பட்ட ரூபா.3,213,899 மூலதனச் செலவுக் கொடுப்பனவுகள் காசுப்பாய்ச்சல் கூற்றில் அது சேர்க்கப்பட்டு காட்டப்பட்டிருந்தது. | -மேற்படி- | காசு உட்பாய்ச்சல் சரியாக அங்கீகரிக்கப்பட வேண்டும். |
| (எ) | மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சினால் நன்கொடையாக பெறப்பட்ட ரூபா.14,000,000 பெறுமதியான தண்ணீர் பவுசர்களின் பெறுமதி காசுப்பாய்ச்சல் கூற்றில் காசுப் பெறுவனவாகக் காட்டப்பட்டிருந்தது. | -மேற்படி- | சரியான பெறுமதிகள் கணக்கீடு செய்யப்பட வேண்டும். |

### 1.6.2 இணங்காத கட்டுப்பாட்டுக் கணக்குகள் அல்லது அறிக்கைகள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | சமர்ப்பிக்கப்பட்ட விரிவான வருமானக்கூற்றின்படி வருமான விடயமொன்றின் | ஏற்றுக் கொள்கிறேன். | அட்டவணைகள் நேரொத்த அறிக்கையுடன் இணங்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | மற்றும் செலவு விடயமொன்றின் பெறுமதி மற்றும் ஆரம்ப புத்தகங்களின்படியான பெறுமதிக்கும் இடையே ரூபா.180,570 ஆன வித்தியாசமொன்று காணப்பட்டது. | | |
| (ஆ) | 2022 ஜனவரி 01 இல் மிகை/பற்றாக்குறையாக அங்கீகரிக்கப்படாத மூலதன மானிய மீதி ரூபா.43,706,376 ஆக இருந்ததுடன் நிகர சொத்துக்கள்/உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்றின்படி ரூபா.15,349,689 ஆக இருந்தமையால் ரூபா.28,356,687 ஆன வித்தியாசமொன்று காணப்பட்டது. | -மேற்படி- | -மேற்படி- |
| (இ) | 2022 ஜனவரி 01 இல் திரட்டப்பட்ட மிகை (பற்றாக்குறை) ரூபா.213,987,018 ஆக இருந்ததுடன் நிகர சொத்துக்கள்/உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்றின்படி ரூபா.241,979,601 ஆக இருந்தமையால் ரூபா.27,992,583 ஆன வித்தியாசமொன்று காணப்பட்டது. | -மேற்படி- | -மேற்படி- |

### 1.6.3 கணக்காய்வுக்கான எழுத்துமூல சான்றுகளின்மை

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | ரூபா.133,706,251 மதிப்புள்ள நிலையான சொத்துக்கள் மற்றும் நடைமுறைச் சொத்துக்களுக்கான போதுமானளவு சான்றுகள் சமர்ப்பிக்கப்படாததால் கணக்காய்வின்போது திருப்திகரமாக சரிபார்ப்பதற்கு மற்றும் உறுதிப்படுத்துவதற்கு முடியாதிருந்தது. | ஏற்றுக் கொள்கிறேன். | உறுதிப்படுததல்கள் சமர்ப்பிக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | நிதியத்தின் காசுப்பாய்ச்சல் கூற்றில் ஆண்டிற்கான சீராக்கங்களாக காட்டப்பட்டுள்ள ரூபா.1,254,702 ஆன பெறுமதி என்ன என்பதை உறுதிப்படுத்துவதற்கான சான்றுகள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படவில்லை. | -மேற்படி- | -மேற்படி- |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2022 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்காக சபையின் வருமானத்தை விஞ்சிய செலவினம் ரூபா.5,616,894 ஆக இருந்ததுடன் அதற்கு நேரொத்ததாக முன்னைய ஆண்டின் வருமானத்தை விஞ்சிய செலவினம் ரூபா.13,086,813 ஆக இருந்தது.

### 2.2 வருமான நிர்வாகம்

#### 2.2.1 மதிப்பிடப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

மீளாய்வாண்டிற்கான மற்றும் முன்னைய ஆண்டிற்கான மதிப்பிடப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான விபரங்கள் கீழே காட்டப்படுகின்றது.

| | | 2022 | | | | 2021 | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | **வருமான வகை** | **மதிப்பிடப் பட்ட வருமானம்** | **பட்டியலிடப்பட்ட வருமானம்** | **சேகரிக்கப் பட்ட வருமானம்** | **திசெம்பர் 31 இல் மொத்த நிலுவை** | **மதிப்பிடப் பட்ட வருமானம்** | **பட்டியலிடப்பட்ட வருமானம்** | **சேகரிக்கப் பட்ட வருமானம்** | **திசெம்பர் 31 இல் மொத்த நிலுவை** |
| | | **ரூபா** | **ரூபா** | **ரூபா** | **ரூபா** | **ரூபா** | **ரூபா** | **ரூபா** | **ரூபா** |
| (i) | வீதவரி மற்றும் வரி | 2,249,224 | 2,401,534 | 1,790,450 | 715,084 | 2,918,210 | 2,208,179 | 2,189,979 | 104,000 |
| (ii) | வாடகை | 7,550,236 | 6,476,026 | 6,385,414 | 1,557,809 | 6,677,434 | 5,952,398 | 6,755,873 | 1,461,207 |
| (iii) | அனுமதிப்பத்திரக் கட்டணம் | 6,156,600 | 6,144,636 | 5,912,336 | 2,045,550 | 4,854,050 | 6,840,705 | 5,027,455 | 1,813,250 |
| (iv) | ஏனைய வருமானம் | 30,974,200 | 17,284,759 | 11,186,184 | 25,943,938 | 26,449,000 | 13,334,075 | 9,523,513 | 19,845,363 |
| | | 46,930,260 | 32,306,955 | 25,274,384 | 30,262,381 | 40,898,694 | 28,335,357 | 23,496,820 | 23,223,820 |

### 2.2.2 வருமானம் சேகரித்தலின் செயலாற்றல்

சபையின் வருமானம் சேகரிப்பதன் செயலாற்றல் தொடர்பான விபரங்கள் கீழே காட்டப்படுகின்றது.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| **(அ) வீத வரி மற்றும் வரி** | | |
| (i) பிரதேச சபை அதிகாரத்திற்குட்பட்ட அபிவிருத்தியடைந்த பகுதிகள் அடையாளம் காணப்பட்டு 2021 ஆகஸ்ட் 27 அன்று 2243 ஆம் இலக்க வர்த்தமானியில் வெளியிடப்பட்டிருந்த போதிலும் வீத வரியை சேகரிப்பதற்கு சபை நடவடிக்கை எடுக்கவில்லை. | சொத்துக் கணிப்பீட்டு பணிகளுக்கான கடிதம் 2023 ஏப்ரல் 21 அன்று அனுப்பப்பட்டது. | பணிகள் துரிதப்படுத்தப்பட வேண்டும். |
| (ii) மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் வசூலிக்கப்பட வேண்டிய ரூபா.1,868,650 ஆன நிலுவை குப்பை வரியை வசூலிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படவில்லை. | தற்போது 232 வரி செலுத்துபவர்களின் நிலுவைத் தொகை கண்டறியப்பட்டுள்ளதுடன் , நிலுவைத் தொகையை வசூலிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | அறவீடுகள் துரிதப்படுத்தப்பட வேண்டும். |
| (iii) மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் நிலுவை வணிக வரிகள் ரூபா.234,000 நிலுவை தொழில் வரிகள் ரூபா.20,000 மற்றும் வருமான அடிப்படையிலான வரி ரூபா.172,584 ஆகியவற்றை வசூலிப்பதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | வணிக வரி ரூபா.16,650 தொழில் வரிகள் ரூபா.7,000 மற்றும் வருமான அடிப்படையிலான வரி ரூபா.172,584 என்பன வசூலிக்கப்பட்டுள்ளதுடன், மீதமுள்ள நிலுவைத் தொகையை வசூலிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | -மேற்படி- |
| **(ஆ) வாடகை** | | |
| இறைச்சிக்கடை, மீன் பலகைகள், வாராந்த சந்தை மற்றும் டெண்டர்களுக்கு மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் பெறவேண்டிய ரூபா.1,518,805 நிலுவை வாடகையை வசூலிப்பதற்கு சபை நடவடிக்கை எடுக்கவில்லை. | மீன் பலகைகளுக்கு ரூபா.36,000 வசூலிக்கப்பட்டுள்ளது. மீதமுள்ள நிலுவைத் தொகையை வசூலிப்பதற்கு சட்டப்படி நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | மீதமுள்ள நிலுவைத் தொகையை வசூலிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| **(இ) ஏனைய வருமானம்** | | |
| மாகாண சபையின் பிரதம செயலாளர் மற்றும் பிற அதிகாரிகளிடமிருந்து 2022 திசெம்பர் 31 இல் பெறப்பட வேண்டிய நீதிமன்ற அபராதம் ரூபா.7,991,379 மற்றும் முத்திரை கட்டணம் ரூபா.17,927,705 என்பன வசூலிக்கப்படவில்லை. | ஏற்றுக் கொள்கிறேன். | முத்திரை கட்டணம் மற்றும் நீதிமன்ற அபராதம் அறவிடப்பட வேண்டும். |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 சட்டத்தினால் ஒப்படைக்கப்பட்டுள்ள செயற்பாடுகளை நிறைவேற்றுதல்

பிரதேச சபை சட்டத்தின் பிரிவு 3 இன் கீழ் பொதுமக்கள் சுகாதாரம், பொது பயன்பாட்டு சேவைகள் மற்றும் மக்களுக்கான பாதைகள் ஆகியவற்றை ஒழுங்குபடுத்துவதற்கும், நிர்வகிப்பதற்கும், மக்களின் நலன், வசதிகள், நலன்புரிகள் உள்ளிட்ட சபை நிறைவேற்ற வேண்டியிருந்த பணிகளை நிறைவேற்றுவது தொடர்பாக அவதானிப்புகள் கீழே தரப்படுகின்றன.

#### 3.1.1 இறைச்சிக்கூடங்களைப் பராமரித்தல்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| சபைக்குட்பட்ட பிரதேசத்தில் அமைந்துள்ள இறைச்சிக் கூடங்களுக்காக அறுக்கப்படுகின்ற விலங்குகளுக்கு, 1988 ஆகஸ்ட் 23 ஆம் திகதிய பொது விதிகள் துணைச் சட்ட வர்த்தமானி அறிவித்தலின் 32 ஆம் துணைச் சட்டத்தின் 9 ஆம் பிரிவின் பிரகாரம் பொது சுகாதார பரிசோதகரால் பரிசோதிக்கப்பட்டு அடையாளமிடப்பட்ட ஒவ்வொரு 01 கிலோகிராம் இறைச்சிக்காகவும் ரூபா 10 இற்கு மேற்படாத கட்டணம் 2022 ஆம் ஆண்டில் வசூலிக்கப்படவில்லை. | 2023 ஆம் ஆண்டிலிருந்து வசூலிக்கப்படுவதற்கான நடவடிக்கை எடுக்கப்படும். | துணைச் சட்டத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

### 3.2 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| அளுத்கம மாட்டிறைச்சி கடைக்காக 2020 மே 11 ஆம் திகதி பற்றுச்சீட்டு இலக்கம் 679 இன் பிரகாரம் பெறப்பட்ட ரூபா.50,000 ஆன திருப்பிச் செலுத்தக்கூடிய பாதுகாப்பு வைப்புத்தொகையானது, 2021 ஆம் ஆணடில் பெற வேண்டியுள்ள வாடகை தொடர்பான பற்றுச்சீட்டின் பிரதியின் பிரகாரம் ஈடுசெய்யப்பட்டிருந்ததுடன் 2022 ஆம் ஆண்டில் பெற வேண்டிய வாடகைக்காக அப்பற்றுச்சீட்டின் மூலப்பிரதி சமர்ப்பிக்கப்பட்டு அதே வைப்புத் தொகை 02 சந்தர்ப்பங்களில் ஈடுசெய்யப்பட்டிருந்தது. | அறவிடுவதற்கான நடவடிக்கை எடுக்கப்படும். | இழப்பு பொறுப்பு வாய்ந்த தரப்பினரிடமிபுந்து அறவீடு செய்யப்பட்டு கணக்காய்விற்கு அறிக்கையிடப்பட வேண்டும். |

### 3.3 செயற்பாட்டு செயற்திறனின்மைகள்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| பல்வேறு வைப்பு நிலுவைகளில், 01 முதல் 04 ஆண்டுகள் வரையான அரச ஊழியர்களின் சேமலாப நிதியத்திற்கு செலுத்தப்படாத ரூபா.1,674,872 ஆன மீதியும், 06 மாதங்களுக்கு மேற்பட்ட ரூபா.289,054 ஆன 16 காசோலைகளும். 2019 ஆம் ஆண்டில் விதவைகள் அனாதைகள் நிதியத்திற்கு செலுத்தப்படாத ரூபா.17,958 உம் மற்றும் உள்ளூராட்சித் திணைக்களத்திற்கு செலுத்தப்பட வேண்டிய ரூபா.9,589 உம் தீர்க்கப்படுவதற்கு மீளாய்வாண்டில் நடவடிக்கை எடுக்கப்படவில்லை | அரச ஊழியர்களின் சேமலாப நிதியத்திற்கு ரூபா.448,396 செலுத்தப்பட்டுள்ளது. மீதி ரூபா.1,226,475 ஐ விரைவில் அனுப்புவதற்கான ஏற்பாடு செய்யப்படும். ரூபா.89,054 மதிப்பிலான 15 காசோலைகள் மட்டுமே மீண்டும் செலுத்தப்படுவதற்கு அல்லது வருமானத்திற்கு எடுக்கப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதுடன் மீதமுள்ள தொகை செலுத்தப்பட்டுள்ளது. | நிலுவைத் தவணைகள் விரைவில் செலுத்தப்பட வேண்டும். |

### 3.4 சொத்துக்கள் முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| உள்ளூராட்சி திணைக்களத்திடம் பெறப்பட்ட ரூபா.700,000 ஒதுக்கீட்டில் 2019 ஆம் ஆண்டு லொலுகஸ்வெவ குப்பை மேட்டில் நிர்மாணிக்கப்பட்ட குழாய் கிணறு, 02 வருடங்களுக்கு மேற்பட்ட காலமாக செயலிழந்து காணப்பட்ட போதிலும் அது புனரமைக்கப்படாததால் குப்பை மேட்டிற்கு தேவையான நீர் மேலதிக கிரயமொன்று செலவிடப்பட்டு வெளியில் இருந்து பெறப்பட்டுக் கொண்டிருந்தது. | குழாய் புனரமைக்கப்படுவதற்காக அனுப்பப்பட்டுள்ளது. | குழாய் கிணறு துரிதமாக புனரமைக்கப்படுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |